<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>

<u>நாள் – 07.07.2025</u>

OS.66/2021

**வா.சா.1 திரு. ராஜேந்திரன்**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

<u>2 முதல் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>

1) என்னைப்போலவே சண்முகம், ரமணி ஆகியோர் ஒரு ஒப்பந்தம் 1ம் பிரதிவாதியிடம் செய்ததாக சொல்லி அசல் வழக்கு எண்.165/2021, 65/2021 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கில் உள்ள சொத்து விவரமும், இந்த வழக்கில் உள்ள சொத்து சர்வே எண்ணில் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2) சண்முகம், ரமணி ஆகியோரும் 2008ம் ஆண்டில் ஒப்பந்தம் செய்ததாக சொல்லி 2021ல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான், நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் அவர்களும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நான், சண்முகம், ரமணி ஆகியோர் 1ம் பிரதிவாதி மாணிக்கத்துடன் சேர்ந்து ஒரு மோசடியான ஒரு கிரய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மாணிக்கத்திற்கு எந்தவித பொது அதிகார பத்திரத்தையும், 2ம் பிரதிவாதி ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3) 2ம் பிரதிவாதி 11.09.1995ம் தேதியில் புத்தன் என்பவருக்கு மட்டும் தான் பொதுஅதிகார ஆவண எண்.175/1995 என்ற பொது அதிகார பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்கள், அதனை ரத்தும் செய்துவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, மாணிக்கம் என்பவருக்கு கிருஷ்ணசாமி 25.09.1997ம் தேதியில் ஒரு பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார், அது பதிவும் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நான் சொல்லக்கூடிய பொது அதிகார பத்திரத்தில் 2ம் பிரதிவாதி

கையொப்பம் ஏதும் செய்யவில்லை, அந்த ஆவணம் 1ம் பிரதிவாதியால் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

4) தாவா சொத்துக்கள் குறித்தும் மற்றும் வேறு சில சொத்துக்கள் குறித்தும் 2ம் பிரதிவாதி ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை அவரது வாரிசுகளுக்கு எழுதிக்கொடுத்துள்ளார், அதை அனுசரித்து வருவாய் ஆணங்களும் அவர்கள் பெயரில் மாற்றம் செய்யப்பட்டு அவர்கள் தான் அனுபவத்தில் உள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல, 2ம் பிரதிவாதி பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் மட்டும் தான் தெரியும், மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது.

5) 2ம் பிரதிவாதிக்கு தெரியாமல் மோசடியாக பொது அதிகார பத்திரம் ஏற்பட்டுள்ளது தெரிந்து அவர் அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் முன் தேதியிட்டு ஒரு ஒப்பந்தத்தை தயார் செய்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் நான் சொல்லுவதுபோல ஒரு ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதனை பதிவு செய்திருப்பபோம், பொய் என்பதால் தான் அவ்வாறு பதிவு செய்யப்படவில்லை. மேற்படி நான் சொல்லக்கூடிய ஒப்பந்த ஆவணம் முன்தேதியிட்டு தயார் செய்யப்பட்டதால் தான் காலம் கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன், இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.07.07 17:31:34 +0530